## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### கழக முன்னோடி

# மாயூரம் காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 5–

கழக முன்னோடி – முனைவர் – காந்தி கருணாநிதி அவர்கள், நேற்று (4.3.2025–செவ்வாய்க்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது மறைவுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னைய்யா அவர்களின் பேரன் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இளமைக் காலத்தில், அவரது உற்ற நண்பர்களில் ஒருவராக விளங்கிய மாயூரம் இ.காந்தி அவர்களின் புதல்வர்– கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்ட முனைவர் காந்தி கருணாநிதி அவர்கள், உடல்நலக்குறைவால், நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

‘ஆவின்’ நிறுவனத்தில் அதிகாரியாக அவர் பணியாற்றி வந்தபோதும், கழக நிகழ்ச்சிகளிலும் – தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டங்களிலும் , நான் பங்கேற்கும் நிகழ்வுகளிலும் தவறாமல் காந்தி கருணாநிதி தென்படுவார் எனக் கூறிடும் அளவுக்கு, கழகக் கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டவராக விளங்கியவர் அவர். பணி ஓய்வுக்குப் பிறகு முன்னினும் தீவிரமாக கழகப் பணியாற்றி வந்தார்.

தமது தந்தை வழியில், கழகத்தில் பெரும் பற்றும், பிடிப்பும், ஈடுபாடும் கொண்டு கழகப் பணியாற்றி வந்த முனைவர் காந்தி கருணாநிதி அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### தந்தை பெரியார் மீது பெரும் பற்று – பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பு –

# தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவர், கவிஞர் நந்தலாலா!

## மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 5-

“தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள்!” என்று, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக் குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

தமிழ்நாட்டின் புத்தகத் திருவிழாக்கள், முற்போக்கு மேடைகள், தொலைக்காட்சி விவாதங்கள், பட்டிமன்றங்கள் எனக் கவிஞர் நந்தலாலா அவர்களின் குரல் ஒலிக்காத மேடையே இல்லை எனும் அளவுக்கு அனைத்து உணர்ச்சிகளையும், அரிய தகவல்களையும் தமது பேச்சில் வெளிப்படுத்தும் திறம் பெற்றவர் அவர்.

காவிரிக்கரையின் மைந்தனான கவிஞர் நந்தலாலா அவர்கள் தமது ஊரான திருச்சியின் மீது கொண்ட தீராக் காதலுக்கு, “திருச்சிராப்பள்ளி: ஊறும் வரலாறு” நூலே சான்றாகும்.

அவரது ஆற்றல் தமிழ்ச் சமூகத்துக்கு மேலும் பயனளிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் அவரை நியமித்திருந்தோம் என்பது குறிப்பி டத்தக்கது.

தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து, “தாம் வாழ்ந்த காலம் முழுதும், மானமும் அறிவும்; துணிச்சலும் செயலுமாக வாழ்ந்தவர் கலைஞர். உரிமை மீட்புப் போரில் அவரே நமக்கு என்றும் போர்வாள்” என்று உண்மை இதழில் அவர் எழுதிய சொற்களை மறக்க முடியாது. என் மீதும் மிகுந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார். எனது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பரந்த மனத்தோடும் அன்போடும் வாழ்த்திப் பேசியதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

மேலும் பல்லாண்டுகள் தமிழ்ச் சமூகத்துக்கு அருந்தொண்டாற்றவிருந்த அவர் மறைந்துவிட்டார் என்பது வேதனையளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தின ருக்கும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் தோழர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பண்ருட்டி நகரில் முதல்வர் பிறந்த நாள் விழா!

பண்ருட்டி, மார்ச் 5 -

பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன் னிட்டு , நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டு வார்டுகளில் கழக கொடிகள் ஏற்றி இனிப்புகள் அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பண்ருட்டி பேருந்து நிலையம் எதிரில் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கி தந்தை பெரியார் போக்குவரத்து நிர்வாகிகள் சார்பில் கழக கொடி ஏற்றி இனிப்புகள், நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

மாவட்டத் துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், நகர மன்ற துணை தலைவர் சிவா, நகர அவைத் தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி பிரபு , பரணிசந்தர், மாவட்ட வர்த்தக அணி ராம் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அய்யா வைகுண்டர் போதித்த வழி நடந்து மனிதம் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மார்ச் 5 -

அய்யா வைகுண்டர் போதித்துச் சென்ற வழி நடந்து மனிதம் காப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அய்யா வைகுண்டர் அவர்களின் 193 ஆம் பிறந்தநாளை யொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஆதிக்க நெறிகளுக்கும் சாதியக் கொடுமைகளுக்கும் எதிராக வெகுண்டெழுந்து, சமத்துவத்துக்காகப் போராடிய அன்பின் திருவுரு அய்யா வைகுண்டர் அவர்களின் 193ஆம் பிறந்தநாள்!**

**“எளியாரைக் கண்டு இரங்கியிரு என் மகனே! வலியாரைக் கண்டு மகிழாதே என் மகனே!” என அவர் போதித்துச் சென்றவழி நடந்து மனிதம் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல் - மண்டல மேலிட பார்வையாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையால் ஏற்கனவே அறிவித்தவாறு 22.03.2025 அன்று வழக்கறிஞர் அ. சரவணன் அவர்களை தலைமை தேர்தல் ஆணையாளராக கொண்டு நடைபெறும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலை மேற்பார்வையிட மண்டலம் வாரியாக பின்வரும் கழக நிர்வாகிகள் மேலிட பார்வையாளர்களாக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

| மண்டலம் | பணிமனையின் விபரம் | மேலிட பார்வையாளர்கள் |
|---|---|---|
| தண்டையார் பேட்டை மண்டலம் | 1. தண்டையார் பேட்டை – 1 | இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் |
| | 2. தண்டையார் பேட்டை – 2 | |
| | 3. திருவொற்றியூர் | |
| | 4. எண்ணூர் | |
| | 5. வியாசர்பாடி | |
| | 6. மாதவரம் | |
| | 7. மண்டல தொழிற்கூடம் (தண்டையார்பேட்டை) | |
| வடபழனி மண்டலம் | 1. தியாகராயர் நகர் | சூர்யா வெற்றிகொண்டான் இணைச் செயலாளர், தி.மு.க. சட்டத்துறை |
| | 2. கலைஞர் நகர் | |
| | 3. அய்யப்பன்தாங்கல் | |
| | 4. வடபழனி | |
| | 5. பூவிருந்தவல்லி | |
| | 6. குன்றத்தூர் | |
| அண்ணாநகர் மண்டலம் | 1. அண்ணா நகர் | ந. மனோகரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் |
| | 2. அம்பத்தூர் | |
| | 3. ஆவடி | |
| | 4. பாடியநல்லூர் | |
| அடையாறு மண்டலம் | 1. அடையாறு | அழகிரி சதாசிவம் துணைச் செயலாளர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி |
| | 2. மந்தைவெளி | |
| | 3. ஆதம்பாக்கம் | |
| | 4. திருவான்மியூர் | |
| | 5. கண்ணகி நகர் | |
| | 6. பெரும்பாக்கம் | |
| | 7. சைதாப்பேட்டை | |
| | 8. பட்டுல்லாசாலை | |
| குரோம்பேட்டை மண்டலம் | 1. ஆலந்தூர் | கா. அமுதரசன் துணைச் செயலாளர், தி.மு.க. மாணவர் அணி |
| | 2. குரோம்பேட்டை – 1 | |
| | 3. குரோம்பேட்டை–2 | |
| | 4. தாம்பரம் | |
| | 5. கிளாம்பாக்கம் | |
| அயனாவரம் மண்டலம் | 1. தலைமைகம் | ஆர்.டி.மதன்குமார் அமைப்பாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி |
| | 2. மத்திய பணிமனை | |
| | 3. அயன்புரம் | |
| | 4. பேசின்பாலம் | |
| | 5. பெரம்பூர் | |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04.03.2025

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு 16வது வட்டத்தில் 1000 பேருக்கு உணவு - நல உதவிகள்!

## புழல் எம். நாராயணன் வழங்கினார்

சென்னை, மார்ச் 5 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டம் ஆண்டார்குப்பம் பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டக்கழகத்தின் சார்பில், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் ஏற்பாட்டில் ஆண்டார்குப்பம் பெருமாள் கோவில் தெரு சந்திப்பில், 1000 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு அறுசுவை அசைவ உணவு மற்றும் நல உதவிகளையும் வழங்கினார்கள்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், பி. தரணி, எஸ். கருணாகரன்,வட்டக் கழக நிர்வாகிகள் இ. அருள், சி. முத்தையா, கே. ராஜ்மோகன், குமரவேல், என். மகேஷ்குமார்,ஜி. நாகலிங்கம், சடையங்குப்பம் நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், பர்மா நகர் தினேஷ் சங்கர், கிருபாகரன், சாம்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் வட்டச் செயலாளர் இ கண்ணப்பன் தலைமையில், பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன், கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, முதலமை ச்சரின் பிறந்த நாளை கழகத்தினர் கொண்டாடி மகிழ்ந்தனர். நிகழ்ச்சி துவங்குவதற்கு முன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுமக்களும் கழகத்தினரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், கழக முன்னோடிகள், வியாபாரப் பெருங்குடி மக்கள் என அனைவரும் அறுசுவை உணவை ருசித்து மகிழ்ந்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி 16வதுவட்டக் கழகத்தின் சார்பில், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு,1000 பேருக்கு அறுசுவை அசைவ காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். நிகழ்ச்சி துவங்குவதற்கு முன் உறுதிமொழி ஏற்று கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி முதலமைச்சரின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. மாவட்ட துணை செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், கே. சிவசங்கரன், பி. தரணி, எஸ். கருணாகரன், இ. அருள், சி.முத்தையா, கே. ராஜ்மோகன், குமரவேல், என். மகேஷ் குமார், ஜி. நாகலிங்கம், சடையங்குப்பம் நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், பர்மா நகர் தினேஷ் சங்கர், கிருபாகரன், சாம்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

### முன்னாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்

# காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மார்ச் 5 -

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னைய்யா பேரனும்,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் மாயூரம். சி.காந்தி அவர்களின் மகனும் கடந்த அறுபது ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீவிர செயல்பாட்டாளரும், மேனாள் பால்வளத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், ஆவின் நிறுவனத்தின் ஓய்வு பெற்ற மேலாளர் (கணக்குகள்) கவிஞர், ‘வணக்கம் தமிழ்நாடு’



மின்னிதழ் முதன்மை செய்தியாளரும் ஆன முனைவர். காந்தி கருணாநிதி(வயது 69) உடல்நிலை குறைவால் மியாட் மருத்துவமனையில் நேற்று (04.03.2025) இயற்கை எய்தினார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது இறுதி நிகழ்வுகள் இன்று (05.03.2025 ) 1/732,கிருஷ்ணவேணி நகர், விரிவாக்கம் ll ,முகலிவாக்கம்,சென்னை600 125. என்ற முகவரியில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறுகிறது.

தொடர்ந்து முகலி வாக்கம் மின் மயானத்தில் தகனம் செய்யப்படுகிறது.

இச்செய்தியறிந்து கழக முன்னணியினர், ஆவின் ஊழியர்கள் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி

# இரா.செல்வகுமார் தாயார் ஆர்.தனம்மாள் படத்திறப்பு நிகழ்ச்சி!

## கழகத்தினர் பங்கேற்பு!

தாம்பரம், மார்ச்.05-

தாம்பரம் மாநகர வர்த்தகர் அணியின் துணை அமைப்பாளர் இரா.செல்வகுமாரின் தாயாரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் எஸ்.பிரகாஷ், மாநகர தொழிலாளர் அணியின் துணை அமைப்பாளர் எஸ்.மகேஷ் ஆகியோரின் பாட்டியுமான ஆர்.தனம்மாள் அவர்களின் 16வது நினைவு நாள் நிகழ்ச்சியை



முன்னிட்டு அன்னாரின் திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (5.3.2025) மாலை 6 மணியளவில் இடம் எண்.10, ரங்கநாதபுரம், மேற்கு தாம்பரத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும், உற்றார் உறவினரும், பொது மக்களும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்துகின்றனர்.



எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு, பள்ளிக்கூடம் சாலையில் இயங்கிவந்த சி.ஆர்.எஸ். மெக்நிக்கல்ஸ் ரோடு நியாயவிலைக் கடை, குடும்ப அட்டைதாரர்கள் கோரியதன் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புதிய பூபதி நகரிலுள்ள புதுப்பிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அக்கடையை தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு நேற்று திறந்து வைத்தார்